1972 மார்ச் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி : திருநெல்வேலியில் அந்த லெவல் கிராஸிங்கில் இருக்கக்கூடிய அந்தப் பாலம் பற்றி இது என்று நான் கருதுகிறேன். நீண்ட காலமாக அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதால் போக்குவரத்திற்கு மிக இடைஞ்சலாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அந்த மேம்பாலத்தை கட்டி முடிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1972 இறுதிக்குள் முடிந்துவிடும். அதைத் துவக்கிய நேரத்தில் சிலர் ஹைகோர்டில் ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்தார்கள். பிறகு சிவில் ஸுட் ஒன்று தாக்கல் செய்தார்கள். இதனால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது அதைத் துரிதமாக முடிக்க அரசாங்கம் எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இது முடிந்துவிடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மேம்பாலம் கட்டுவதில் அதிகக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பஸ் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால் இப்போது போட்டிருக்கிற பைபாஸ்-யைத் தவிர்த்து வேறொரு பைபாஸை அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நகராட்சிமன்றத் தலைவரையும், உயர் அதிகாரிகளையும் கலந்தாலோசித்து இப்போது போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் போக்குவரத்தைச் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தையும் நம் அதிகாரிகள் கவனிப்பார்கள்.

* 324 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் அருகே ரயில்வே பாதையின் குறுக்கே போடப்பட்டுள்ள சாலை மேம்பால வேலைக்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு ?

(இ) இதற்கான மொத்தச் செலவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 26,20,920.

(இ) அக்டோபர் 1971 முடிய செலவான தொகை ரூ. 27,91,319.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இவ்வளவு செலவிடப் பட்டு கட்டப்பட்ட அந்தப் பாலத்தில் கார்கள், பஸ்கள் செல்கிற போது ஓரங்கள் சரியாக அமைக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருக்கிறது. ஆகவே, அதன் ஓரங்களில் தடுப்புச் சுவர்களோ, தடுப்புக் கற்களோ ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த மதிப் பீட்டில் அப்படிச் செய்யவேண்டுமென்று போடவில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் பல கருத்துக்கள் வந்திருப்பதால், அதைப் பரிசிலிக்க அதிகாரிகள் கோரப்பட்டிருக் கிறார்கள். இப்போதே மதிப்பீட்டுத் தொகையை விட அதிக மாகச் செலவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

ஜவ்வாது மலையிலுள்ள சந்தன மரங்கள்.

* 325 வினா—**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஜவ்வாது மலையில் சந்தன மரங்களைப் பாதுகாக்க வேண்டி, வன குத்தகைகளை சில ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, ஜவ்வாது மலையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அந்தப் பகுதியில் 2 மாதங்களுக்கு முன்பு புதிய அம்பாசிடர் கார்களில் சந்தனக் கட்டைகளை ஓரளவு பதுக்கி கடத்திச் சென்றபோது, வனத் துறையைச் சார்ந்தவர்கள் 2-3 கார்களை துரத்திப் பிடித்து இருக்கிறார்கள். தப்பித்துச் சென்ற கார்களும் பிடிபட்டன. மேலும் அத்தகைய விலையுயர்ந்த மரங்கள் திருட்டுப் போகாமல் இருப்பதற்காக வனத்துறை எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமா?